ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2269/73 - 2022 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2022.03.04
*2269/73 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, குறுவிட்ட புதிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக காணிப் பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்,*

தொடர்பு இல. DVP/*02/04*/NW/*443*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, பெப்புருவரி 25.*

1A - G 36273 — 32 (2022/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 155, குருவிட்ட கிராம அலுவலர் பிரிவில் குருவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள குருபெல்கடஹேன என்றழைக்கப்படுகின்ற காணியின் விஸ்தீரணத்திலிருந்து சுமார் 14 பேர்ச் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு: காவல் அறை மற்றும் தாங்கி; கிழக்கு: தரிசு நிலம் மற்றும் ஹச் கோபுரம்; தெற்கு: தரிசு நிலம் மற்றும் உத்தேச நீர் சுத்திகரிப்பினை நிர்மாணிக்கின்ற காணிப்பகுதி; மேற்கு: தேயிலைக் காணி மற்றும் வீடு.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்:*

1. *திருமதி பி. எஸ். இன்துகா ரத்னசிரி,*
   *இலக்கம்: 385/2,*
   *பாலுவத்த வீதி, பனுகரேபிடிய.*

2. *திரு. பி. பியரத்ன,*
   *இலக்கம்: 361/A,*
   *தியேட்டர் வீதி,*
   *குருவிட்ட.*

EOG *03- 0759*

---

**திருத்தம்**

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2116/30 மற்றும் 2019.03.26 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள எஹலியகொட புதிய நீர் வழங்கல் செயற்திட்டத்திற்குரிய கட்டளையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம். 60 பேர்ச் என குறிப்பிடப்பட்டுள்ளதாயினும் அது 85 பேர்ச் என திருத்தியமைக்கப்பட வேண்டுமென 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிவிரின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், இத்தால் அறியத்தருகின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்,*

தொடர்பு இல. DVP/*02*/*04*/KE/*428*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, பெப்புருவரி 22.*

EOG *03- 0760*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.